உண்டு. தாமரையிலுமா? மலர்ச்சி ஒன்றில்தான் முகத்திற்குத் தாமரை ஒப்பு.

செல்வர்க்கு ஒப்பு ஆவார் என்றால் உணவு உறையுள் உடை என்றவற்றில் தாம் ஒப்புவார்கள் என்றபடி!

அவ்வாறின்றி அறிவுநிலை செல்வநிலை உடல் நிலை அனைத்திலும் ஒரே நிறுத்த நிறையாய் இருத்தல் வேண்டும். முருகப்பிள்ளை வீட்டிலும் கருவேப்பிலைக்குப் பஞ்சமுண்டு என்பதற்கு மாறாக, இல்லை என்பதே எல்லார்க்கும் இல்லா தொழியும் நிலையை நாம் வேண்டினோமில்லை. அந்நிலை என்றும் ஏற்படாது என்று நாம் எண்ணியதால்! திருவள்ளுவரும் அப்படியே என்க.

நாம் இவ்வாறு கூறியதில் பிழையிருந்தால் எடுத்துக்காட்ட வேண்டும். அதை நம் குயிலில் வெளியிடத் தவறமாட்டோம். அதைவிட்டு வள்ளுவர் முரணுகின்றார் என்று கூறிக் கொள்வதால் யாருக்கு என்ன பயன் விளையும்

திருவள்ளுவர் கருத்து இதுதான் என்று நாம் நம்புவதால் இக்கருத்தை ஆதரிப்பார் எவராயினும் அவரை இதைப் பொறுத்த மட்டில் நாம் ஆதரிப் போம். இதை எதிர்ப்பார் எவராயினும் அவரை இதைப் பொருத்தமட்டில் எதிர்ப்போம்.

கேட்: சிலப்பதிகாரம் பகுத்தறிவுக்கு ஒவ்வா தது; ஆரியத்தைத் தமிழரிடம் புகுத்தும் நோக்க முடையது என்று பெரியார் சொல்லமாலா

கிளத்: கதையமைப்பு நன்று. தமிழர் வாழ்க்கை முறைகள் சில நல்லன. பொருந்தாதவை பகுத்தறிவுக் கொவ்வாதவையாய் இருக்கின்றன. பாடம் சொல்லும் புலவர்கள் இவைகளை மாண

வர்கட்கு எடுத்து விளக்குவதில்லை. அதனால் ஆரியம் தமிழகத்தில் வலியுறுகின்றது. தமிழர் ஒழுக்கம், கலை, நாகரிகம், பண்பாடுகள் குறைவு படுத்தப்படுகின்றன. புதியதொரு சிலப்பதிகாரம் எழுதிக் கொள்ளலாமன்றோ?

கேட் : தொல்காப்பியம் ஒரு தமிழனால் செய்யப்படவில்லை. தமிழர் ஒழுக்கம், கலை, நாகரிகம் அதில் மறுக்கப்படுகின்றன என்று கூறலாமா பெரியார்?

கிளத்: ஆயிரம் முறை கூறலாம். வெள்ளை வாரணனரும் பிறரும், தொல்காப்பியத்தில்.பார்ப் பனரைப் பற்றிய செய்யுட்களை இடைச்செருகல் செய்துள்ளார்கள் என்று கூறினார்கள்.

இடைச் செருகல்களை நீக்கிப் .பதிப்பிக்கலா மன்றோ புலவர்கள்! செய்யட்டும். செய்த பிறகு பெரியார் அவ்வாறு கூறமாட்டார்.

குரல் : 2 குயில் 16—2—60 இசை : 30-31

* * * *

கேட்டல் :

தென்கடலில் முத்திருக்கும் தென்னாட்டில்
தமிழிருக்கும் என்கிறார் மெய்தானே தமிழரே
அங்ஙனம்ஏ தேனுமுண்டோ தமிழரே?

கிளத்: தென்கடலில் முத்திருக்கும் தென்குமரி
ஆழ்ந்திருக்கும் தென்னாட்டில் எல்லாம்
உண்டு தோழரே—அதைத் தெரிந்துகொள்ள
ஆசை வேண்டும் தோழரே.

கேட்: முன்னாளில் இலக்கியங்கள் இந்நாளின்
இலக்கியங்கள் தென்னாட்டில் உள்ளனவோ
தமிழரே? நீர் செவ்வையாய் விளக்கவேண்டும்
தமிழரே?

கிளத்: பொன் சேர்தொல் காப்பியலுமும்
புறப்பொருளும் அகப்பொருளும்
தன்னேரிலாக் குறளும்—தோழரே—இவை
சார்ந்தபல் லாயிரமாம்—தோழரே.

கேட்: முன்னாளின் இலக்கியங்கள்
மொழிந்தீர்கள் இவைஎன்றே
இந்நாளின் இலக்கியங்கள்—தமிழரே—நீர்
ஏதொன்றும் கூறவில்லை தமிழரே.

கிளத்: இந்நாளில் தோன்றியவை
எண்ணற்ற இலக்கியங்கள்
இன்னும்அவ் விளைவின் ஓட்டம்—தோழரே—
சற்றே
இருவென்றால் இருந்திடுமோ—தோழரே.

கேட்: நன்றான தமிழ்நூற்கள்
நல்லனவோ அல்லனவோ?
குன்றாமல் விளக்கவேண்டும் தமிழரே—உம்
கொள்கையினில் ஆசைவைத்தேன் தமிழரே!

கிளத்: ஒன்றாகும் மக்கள்நிலை
உணர்வொன்றே பெறத்தக்கதாம்
அன்றே உரைத்தஇவை—தோழரே—இதை
ஆரும் உரையாத போது தோழரே.

கேட்: நன்றான அக்கருத்தை
நாட்டுகின்ற இலக்கியங்களை
ஒன்றேனும் தனித்தமிழ்ழில்—தமிழரே இங்
குள்ளதுவோ சொல்லிடுவீர்—தமிழரே.

கிளத்: இன்றுநீர் தனித்தமிழின்ஒன்
றிப்பதாக ஒப்புகின்றீர்
குன்றிலொரு குரங்கு வந்தால்—தோழரே—அக்
குரங்குகளே குன்றாகுமோ—தோழரே.

கேட்: வீட்டிலே உள்ளபொருள்
வேறுபட்டால் அந்தப்பொருள்
வேறுபொருள் என்னாரோ தமிழரே—அவ்
வேறுபொருள் உம்பொருளோ தமிழரே.

கிளத்: .வீட்டிலே இருந்த பொருள்
வேறுபட்டால் வீட்டுரிமை
வேறாகிப் போய்விடுமோ தோழரே—எம்
வீட்டுப்பொருள் தேடேமோ தோழரே.

கேட்: கூட்டக்கடல் நீரின் உள்ளே
குமரிநாடு முழுகிற்றென் நீர்
நாட்டுக்கிதில் பெருமை என்ன தமிழரே—
நன்றாக விளக்க வேண்டும் தமிழரே. [இனி

கிளத்: பாட்டை அறி யாஉலகில்
பழங்குமரி அறிவுவைத்தாள்
மூட்டையுடன் இங்கு வந்தோர் தோழரே—கடல்
முத்தைச் சொல்லி அதை மறைப்பார் தமிழரே.

கேட்: நாட்டைஓட்டிக் குமரிநாடும்
இருந்ததென்றால் தமிழருக்குக்
காட்டஇதில் பெருமை உண்டோ தமிழரே—நான்
காணஇதை விளக்கவேண்டும் தமிழரே.

கிளத்: காட்டைஒத்த உலகில்ஒளி
காட்டிவைத்த குமரிநாட்டைக்
காட்டினால் எம்பெருமை தோழரே—மிகக்
காணுவார் எம்பகைவர் தோழரே.

குயில் 23—2—60 இசை : 32

* * * *

கேட்:'ஒருவனுக்கு ஒருத்தி'' என்பது பற்றித் தமிழில் இலக்கியம் உண்டா

கிளத் : நிறைய உண்டு. ஒருவனுக்குப் பல பெண்டிர் என்பதற்குத் தமிழில் இலக்கியம் இல்லை

கேட்: ''ஒருத்திக்கு ஓர் ஆடவன்'' என்பதற்குத் தமிழில் இலக்கியம் உண்டா?

கிளத்: ஒருத்திக்குப்பல. ஆடவர்களை ஆதரிக்கும். ஆரியர் இலக்கியத்திற்கே மதிப்புக்கொடுத்து தீயர்கள் நிறைந்த இந்தத் தமிழகத்தில் இந்தக் கேள்வியை நீ கேட்டதில் வியப்பொன்றுமில்லை. ஆயினும் இப்படிப்பட்ட அரிய கேள்வி கேட்ட உன்னை முதலில்.ஒரு கேள்வி கேட்க எண்ணுகின்றேன். நீ அதற்காக வருத்தப்படக்கூடாது. உன் மனைவிக்கு நீ இருக்க, மற்றொரு கணவனைச் சேர்க்கும்.எண்ணம் உனக்கு உண்டா? அல்லது, நீ இருக்க உன் மனைவி மற்றொருவனைக் கணவனாக்கிக் கொண்டதுண்டா?

கிளத்: உன் முயற்சியை நான் குறைகூறவில்லை. ஏனெனில், நான் உன் நிலைமையை நீ எவர்கள் காலை நக்குகின்றாயோ, அவர்களின் இலக்கியத்தின் வண்டவாளத்தை உலகு அறியச் செய்து வருவதையே பெரும்பணியாக கொண்டுள்ளேன். இந்த நிலையில் நீ என்னை இலக்கியத்தில் வண்டவாளம் கண்டு அதை உலகறியச் செய்ய உனக்கு உரிமை உண்டு. அல்லவா? துரோபதை ஒரு கற்புள்ளவள் என்பது ஆரியர் இலக்கியம். அதற்குக் காரணமும் கூறுகின்றது. என்னவெனில் அவள் ஐந்து பேரை மணத்தாள்; போதாக் குறைக்கு ஒன்று ஏற்பட்டது அவளுக்கு! கர்ணனையும் புணர மாட்டோமா என்றும் ஏங்கினாள். இது இலக்கியத்தோடு— ஏட்டோடு நின்றுவிட

வில்லை. இன்றைக்கும் நடைமுறையில் உண்டு, ஒருத்தியை பலர் மனைவியாகக் கொள்வது! எங்கே உண்டு? வடநாட்டில் ஆரியரிடம்.

இந்த குச்சுக்காரி நடத்தையையும் வைத்துப் பேரிலக்கியம் செய்துள்ளார்கள். ஆரியர்கள். நானும் அதை உலகறிய காட்டி வருகின்றேன். இல்லையா? அதுபோகட்டும்!

தமிழிலக்கியத்தில் ஒருத்தி பல ஆடவரைக் கணவன்மாராகக் கொள்ளும்படி இல்லை, இல்லை, இல்லை. உன்போல் இப்படிக் கேட்ட வடிகட்டிய முட்டாள்கள் ஒருத்தன் தமிழகத்தில் உண்டாக என்று கேட்டால் உண்டு உண்டு என்று நான் சொல்ல கூடும். ஏனெனில் இதோ நீ கேட்டாய் அல்லவா

உன் கேள்வியின் முட்டாள்தனத்தை நீ சற்று எண்ணி பார்!

வாயால்தான் சோறு உண்ண வேண்டும் என் பதற்குத் தமிழில் இலக்கியம் உண்டா என்று கேட்டால் அது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்? இரண்டு கையும் இரண்டு கால்களும் இருக்கையில் குழந்தைபோல், ஆடுமாடுகள்போல் நடக்காமல் இரண்டு கால்களால் மட்டும்தான் நடக்க வேண்டும் என்பதற்குத் தமிழில் இலக்கியம் எங்கே என்றால் உன் மூளையை எந்த மருத்துவப் புலவரிடம் காட்டுவது?

தமிழிலக்கியம் மிகத் தொன்மையானது. அது தோன்றிய நாளிலிருந்து இன்றையவரைக்கும் இனி மேலும் ஒருத்திக்குப் பல மாப்பிள்ளை இருக்கலாம் என்று கூறியதேயில்லை. கூறப் போவதுமில்லை.

எங்கேயோ தமிழகத்தில் ஒருத்திக்குப் பல ஆடவர் இருக்கிறார்கள் என்றால் அது, ஒட்டுவாரொட்டி சாதியாயிருக்க வேண்டும் என்று சொல்லுவதோர் நோய்கூடப் பலரிடம் காணப்படவில்லையா? திருத்தப்பட வேண்டும். திருத்திக் கொண்டுதான் வருகின்றோம்.

இன்னும் கேள்! இலக்கியம் செய்தருளும் தமிழ்ச் சான்றோர் ஒருத்தி ஒருவனைத்தான் மணக்க வேண்டும் என்பதற்கும் இலக்கியம் செய்தார்களானால், அவ்விலக்கியம் தோன்றுவதற்கு முன்னே ஒருத்திக்குப் பல ஆடவர்கள் இருந்தார்கள் என்றல்லவா முடியும்?

நேற்றிரவு உன் மனைவி உன்னிடமே படுத்திருந்தாள் என்று ஒரு பலகையில் எழுதி உன் வீட்டின் முன் தொங்கவிட நீ ஒப்புவாயா? அப்படி எழுதினால் என்ன பொருள் ஏற்படும் இதற்குமுன் உன் மனைவி உன்னிடம் படுத்திருக்கவில்லை என்றல்லவா பொருளாகும்! உன் மனைவி அப்படிப் பட்டவள் இல்லையே, கற்புடையவள் ஆயிற்றே. அதுபோகட்டும்.

ஒருத்திக்கு ஒருவன் .என்பது தமிழ்நாட்டில் என்றும் இருப்பது அது தெரிந்ததுதான். ஆனால் ஒருத்திக்கு ஒருத்தன் என்பதில் உள்ள சிறப்பு. பற்றித் தமிழில் சொல்லப் பட்டிருக்கிறதா என்றாவது நீ கேட்டிருந்தாலும் அது ஒரு கேள்வி என்றாவது மதிக்கப்பட்டிருக்கும்.

கேட்: அப்படித்தான் கேட்டேன். அதற்குத் தான் விடை சொல்லும்

கிளத்தல் : திருமகன் அருளப் பெற்றுத்
திருநிலத்து உறையும் மாந்தர்

ஒருவனுக்கு ஒருத்தி போல
உளம் மகிழ்ந்து ஒளியின் வைகிப்
பருவிரு பகையும் நோயும்
பசியும்கெட் டொழிய இப்பால்
பெருவிறல் வேந்தர் வேந்தற்கு
உற்றதுபேச லுற் றாம்.

என்பது சிந்தாமணி 2377ம் செய்யுள். இச்செய்யுளில்,

ஒருவனுக்கு மட்டும் ஒருத்தி என்று வாழும் வாழ்க்கை உளமகிழ்ச்சி தருவது என்ற கருத்து காண்க. இது ஒருத்தி ஒருவனுக்கு மட்டுமல்லாமல் பலருக்கு.என்று வாழும் ஆரியர் வாழ்க்கை இன்பம் தருவது என்று ஆசிரியர் விளக்கவே இவ்வாறு கூறினார்.

இன்னொன்று :

ஒருத்தி ஒருவனுக்கு மட்டும் .என்ற நிலை மகிழ்ச்சிக்குரியது என்று கூறும் செய்யுள் தமிழிலக்கியம் தவிர மற்ற.எதிலாவது காட்ட முடியுமா? உன்னை மட்டும் இந்தக் கேள்வி கேட்கவில்லை. உனக்குத் தெரிந்த இலக்கிய ஆய்வாளர் எவராவது இருந்தாலும் அவரையும்தான் கேட்கிறேன்.

நிற்க,

இனி இந்தத் துறையில் நீ தலையிடாதே.

கேட்.: என்மீது நீர் வருந்துகிறீர். நான் கேட்டது பிழைதான்! ஆனால் பெரியார் இப்படி கேட்கிறாரே?

கிளத்: அறிவு என்பது உன்னிடம் கடுகளவும் இல்லை. பெரியார் கூறியதை நீ உன் முட்டாள் தனத்துக்குத் தகுந்த வகையில் பொருள்படுத்திக்

கொண்டாய். பெரியார் என்ன சொன்னார்? அவர் கூறியதின் பொருள் என்ன?—கேள்!

ஒருத்திக்குப் பல ஆடவர் என்ற தீய ஒழுக்கம் இந்நாட்டில் குடிபுகுந்திருப்பதை அவர் எடுத்து காட்டுவதன் மூலமாக ஆரியர் கொள்கையின் விளம்பர ஆற்றலையும், தமிழர்களின் கண்மூடித் தனத்தையும் விளக்கினார். இன்றல்ல! ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகளாக ஓரிடத்தில் மட்டு மல்ல; பட்டி தொட்டிகளில் எல்லாம். இது ஒன்றை யட்டுமல்ல! சாதி புகுந்தது முதலிய ஆயிரத்தை!

தோழனே, பெரியாரின் எதிரிகளின் பேச்சை ஒரு பொருளாக மதிக்கும் தீய ஒழுக்கம் உன்னிடம் படிந்திருக்கிறது. ஒழித்துவிடு. இல்லாவிட்டால் ஒழிந்துவிடு.

குரல் : 2 குயில் 15—3—60 இசை.: 33

* * * *

**ஏழ்மை, இரவல், குறைபாடு.**

கேட்: ஏழ்மை என்றால். என்ன

கிளத்: இழப்பு, இழ்ந்த தன்மை என்று பொருள்.

கேட்: இழ என்பது ஏழ் என்று ஆகுமா?

கிளத்:.முதலில் உள்ள இகரம் ஏகாரம் ஆனது எப்படி .என்றாய்.

ஆயகலைகள் அறுபத்தி நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாள் என்உள்ளத்
இருப்பளிங்கு.வாரா திடர். [தினுள்ளே

என்ற பாட்டி இயை என்பது ஏய என்று ஆனது நோக்குக. மிசைதல் என்பது மேய்தல் என்பதும், வியர்த்தல் என்பதே வேர்த்தல் என்பதும் பிறவும் காண்க.

கேட்: மகிழ்ச்சி! இனி, இழந்தவன் ஏழை எனின் எதை இழந்தவன்

கிளத்: அறிவை இழந்தவன்.

கேட்: பணத்தை இழந்தவன் என்றோ, நுகர்ச்சியை இழந்தவன் என்றோ, முயற்சியை இழந்தவன் என்றோ சொல்லுதல் கூடாதோ?

கிளத்: நீ சொன்ன வெற்றிக்கெல்லாம் அடிப் படை அறிவேயாதலால் அறிவை இழந்தவன் என்று சொல்லுதல் வேண்டும்.

கேட்: அறிவை இழந்தவன் அடையும் நிலை என்ன?

கிளத்: அவன் இரவல் கேட்பவன். அதாவது இரப்போன் என்ற நிலையை அடைய நேரும்.

கேட்: இன்னும் ஏழ்மைக்குப் பெயர்?

கிளத்: ஏழ்மை, இரவல், குறைபாடு அனைத் தும் ஏறத்தாழ ஒரே பொருளுடையவை.

கேட்: அறியாமை நீங்கிவிட்டால் இரவல், ஏழ்மை, குறைபாடு நீங்கிவிடுமல்லவா?

கிளத்: ஆம்.

கேட்: இரத்தல், ஏழ்மை, குறைபாடு நீங்கவே நீங்காது என்று நீங்கள் சொன்னதுண்டா?

கிளத்: ஆம்! ஆனால் நான் சொன்னது மணச்ச நல்லாருக்கன்று. மேலும் நான் சொன்னது ஏழ்மை,

இரவல், குறைபாடு அடியோடு உலகினின்றே தீர்த்துவிட முடியாது. தீர்ந்துவிடாது என்று இன்றும் சொல்லுகின்றேன். படித்தவர்கள் என்று தம்மை எண்ணிக் கொண்டிருக்கும் இத்தமிழ்நாட்டில் மிகப்பலர் இன்னும் இருப்பதால் இனியும் சொல்லித்தான் ஆகவேண்டும்.

கேட்: நீங்கள் சொல்வதை ஓர் எடுத்துக்காட்டால் விளக்கமுடியுமா?

கிளத்: தனித்தோர் உயர்நிலைப் பள்ளி ஒன்று உடைமையாலும், உடையாலும், உணவு உறையுள் வகையாலும் அங்குள்ள மாணவர் நிகர். அம்மாணவர்கள் ஆண்டிறுதித் தேர்வுக்கு எழுதி கொண்டிருந்தார்கள். இரிசப்பன் இறகு (பேனா) கீழே விழுந்து உடைந்துவிட்டது. இரவல் இறகுக்கு கையேந்துகின்றான். இரிசப்பன். இந்தா என்று நீட்டுகின்றான் எட்டியப்பன். இரவல் ஈந்ததால் ஈத்துவக்கும் இன்பத்தை அடைந்தான் எட்டியப்பன். அறிவுலகம் பாடுகின்றது எட்டியப்பனை. இதைத்தான் திருவள்ளுவர்,

'இரப்பாரை இல்லாத ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்று வந்தற்று.'

என்று பாடினார். இந்தச் செய்யுளால் திருவள்ளுவர் சொல்லும் இரப்பு, மணச்சநல்லூர்ச் செய்தியன்று என்பதும் அது அடங்கல் உலகு பற்றியது என்பதும் பெறப்பட்டன.

கேட் : ஏழ்மை, இரத்தல், குறைபாடு. போகாது என்று நீங்கள்மொட்டையாய்ச் சொன்னதில்லை. இவ்வுலக முழுதுமிருந்து ஏழ்மை, இரவல் குறைபாடு முழுதும் போய் விடாது என்றீர்கள். மணச்சநல்லூரிலிருந்து போகச் செய்யலாம் அல்லவா?

கிளத்: செய்யலாம்!

கேட்: முழுதுலகினின்றும் அதைப் போக்கி விடமுடியாதென்று, அதைஎழுதியும் போக்கிவிட முடியாதென்றும் கூறினீர்கள். முழுதும் என்றால் என்ன?

கிளத்: ஏழ்மை, இரவல், குறைபாடு இவற்றின் முதன்மை கெடச் செய்வதைத்தான் அப்படிச் சொன்னேன். முதன்மை கெடுவது என்றால் ஏழ்மை, இரவல்,குறைபாடு இவற்றின் வேர் கெடும் படிச் செய்தல். அதாவது இவற்றிற்கு ஆதார மானது எதுவோ அதுவுமில்லாமற் செய்தல், ஏழ்மை, இரவல், குறைபாடு இவற்றின் ஆதாரம் அறியாமை, அறியாமையோடு ஏழ்மை, இரவல், குறைபாடுகளைத் தீர்ப்பது.

கேட்: எனவே அறியாமை இவ்வுலகிற் இல்லாமையாக செய்வதும் அதனால் ஏற்படும் ஏழ்மை, இரவல், குறைபாடுகளைத் தீர்ப்பதும் (உலகில் எங்குமில்லாமல்) முடியாது என்கிறீர்களா?

கிளத்: ஆம்; அறியாமையை உலகில் இல்லாமல் செய்து விடுவேன் என்று ஒருவன் சொல்வதே பிழை. அறியாமை ஒரே இடத்தில் உலகில் ஒரே காலத்திற்குள் கட்டுப்பட்டதா? நாளைக்குப் பிறக்கும் மையனின் அறியாமையை இன்று நீக்கி விடுவேன் - நீக்கி விட்டேன் என்று சொல்வது எப்படி முடியும்? மறைமலையடிகளார் காட்டும் பழங்கால அறிவுக்கு ஒத்ததான சைவமும் அறிவும் அறியாமையும் என்றும் உள்ளது என்று கூறுவதும் இங்கு அறிதல் வேண்டும். இந்த உலகை, உலகின் நடைமுறையை, தோற்றத்தைக் காண் பவன் அறியாமையாற் காணுகின்றான். அறிவாற் காணுங்கால் ஒரு பொருளைத்தான் காணு...

கிளத்: செய்யலாம்!

கேட்: முழுதுலகினின்றும் அதைப் போக்கி விடமுடியாதென்று, அதைஎழுதியும் போக்கிவிட முடியாதென்றும் கூறினீர்கள். முழுதும் என்றால் என்ன?

கிளத்: ஏழ்மை, இரவல், குறைபாடு இவற்றின் முதன்மை கெடச் செய்வதைத்தான் அப்படிச் சொன்னேன். முதன்மை கெடுவது என்றால் ஏழ்மை, இரவல், குறைபாடு இவற்றின் வேர் கெடும்படிச் செய்தல். அதாவது இவற்றிற்கு ஆதாரமானது எதுவோ அதுவுமில்லாமற் செய்தல், ஏழ்மை, இரவல், குறைபாடு இவற்றின் ஆதாரம் அறியாமை, அறியாமையோடு ஏழ்மை, இரவல், குறைபாடுகளைத் தீர்ப்பது.

கேட்: எனவே அறியாமை இவ்வுலகிற் இல்லாமையாக செய்வதும் அதனால் ஏற்படும் ஏழ்மை, இரவல், குறைபாடுகளைத் தீர்ப்பதும் (உலகில் எங்குமில்லாமல்) முடியாது என்கிறீர்களா?

கிளத்: ஆம்; அறியாமையை உலகில் இல்லாமல் செய்து விடுவேன் என்று ஒருவன் சொல்வதே பிழை. அறியாமை ஒரே இடத்தில் உலகில் ஒரே காலத்திற்குள் சுட்டுப்பட்டதா? நாளைக்குப் பிறக்கும் மையனின் அறியாமையை இன்று நீக்கி விடுவேன் - நீக்கி விட்டேன் என்று சொல்வது எப்படி முடியும்? மறைமலையடிகளார் காட்டும் பழங்கால அறிவுக்கு ஒத்ததான சைவமும் அறிவும் அறியாமையும் என்றும் உள்ளது என்று கூறுவதும் இங்கு அறிதல் வேண்டும். இந்த உலகை, உலகின் நடைமுறையை, தோற்றத்தைக் காண்பவன் அறியாமையாற் காணுகின்றான். அறிவாற் காணுங்கால் ஒரு பொருளைத்தான் காண முடியும்.

அறியாமையைத் தனிமனிதனிடத்தினின்று நீக்கலாம். அடியோடு நீக்குவதெனில் முடியாது என்பதுதான் அத்வைதம் என்பதன் கொள்கை என்பதும் இங்கு அறியத் தக்கது.

கேட்: உலகில் உள்ள அறியாமையாகிய வேரையும், இரவல், ஏழ்மை, குறைபாடு என்ற அதன் மரத்தையும் என் உருசிய நாட்டினின்று நீக்கிவிட்டேன். மற்ற நாட்டினின்றும் நீக்கிவிடவும் முயலுகின்றேன் என்று உருசியன் சொல்லுவதில்உண்மை இல்லையா?

கிளத்: அப்படிச் சொல்லும் உருசியன் கரடி விடுகிறான் என்று நான் முன்னமே சொல்லியிருக்கிறேன்.

கேட்: 'இரப்பாரை இல்லாத' என்ற குறளை உருசியன் பார்த்ததுண்டா? அதை அவன் ஏற்றுக் கொண்டானா?

கிளத்: கரடிவிட்டுக் காரியத்தைச் செப்பனிடுகின்றவன் அதை ஏற்றுக் கொள்ளமாட்டான். அவன் ஏற்றுக்கொள்வானா என்று எதிர்பார்த்துத் திருவள்ளுவர் அதைச் சொல்லவில்லை. 'உருசியனுக்கு ஏமாறாதீர், உலகத்தீரே' என்று எச்சரிக்கும் முறையில் வள்ளுவர் இக்குறளைச் சொன்னார்.

கேட்: அக்குறளை உருசியன் மறுத்ததுண்டா?

கிளத்: ஏறத்தாழ முப்பது ஆண்டுகளாக உருசியன் இதையும் இதைப்போன்ற சிலபல குறட்பாக்களுக்கு மறுப்புத் தேடுகின்றான். தமிழகத்திலிருந்து அழைக்கப்படும் தமிழறிஞர்களிடமிருந்தே திருக்குறளை உயிரற்றுப்போகும்படி செய்துவிட வேண்டும் என்பதும் அவன் நோக்கங்களில் ஒன்றாகும். அன்மையில் தமிழகத்தினின்று அங்குச் சென்

தமிழறிஞர்களிடம் அவன் முதலில் கேட்டது என்ன?— இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் செய்த திருக்குறளில் என்ன இருக்க முடியும் என்றானாம். அதுபற்றி ஆராயத இளைஞர்கள் 'ஆம்' என்னாமலும் 'இல்லை' என்னாமலும் திரும்பினார்கள் என்று கேள்வி. பல குறட்பாக்கள் உருசியனுக்குத் தலைவேதனைக் கொடுப்பவை. அதில் மற்றொன்று.

இலர்பலர் ஆகிய காரணம், நோற்பார்
சிலர்! பலர் நோவாதவர்!

இதன் பொருள் :

ஏழை, இரப்பவர், குறைபாடுடையவர் உலகில் பெரும்பான்மையோர், மற்றவர் சிறுபான்மையோர். இதற்குக் காரணம் நோற்பார் சிலர்! நோவாதவர் பலர் என்பது தான்.

கேட்: நோற்பார் .எவர்?

கிளத்: தம் நலம் நீக்கிப் பிறர் நலம் கருதித் தொண்டு செய்யும் சான்றோர் நோற்பார். இந்த நோற்பார் தம் போன்ற நோற்பாரைக் காத்தலும், நோற்பாரை ஆக்கலுமே தம் மக்களிடம் படிந்து கிடக்கும் ஏழ்மை, இரவல் குறைபாடுகளை ஒருவாறு நீக்கும் பொதுவுடைமைக்காரர்.எனப்படுவர். அதைவிட்டு அயல்நாடு சென்று பதுங்கி வாழ்ந்து வந்த ஒரு நோற்பாரைத் தேடி அவர் மண்டையை உடைத்துவிட்டு வருக என்று இரும்பு உலக்கையை எடுத்துக் கொடுத்துப் பயணச் செலவுக்குப் பணமும் கொடுத்தனுப்புகின்றவனா பொதுவுடைமைக்காரன்? அவனா குறைபாடு இல்லாதவன்? அவனா மற்ற மக்களோடு சரிநிகர் என்று எண்ணத்தக்கவன். அவன் வாழும் நாட்டிலா ஏழ்மையும், இரப்பும், குறைபாடும் அறவே நீங்கிவிட்டன? கரடி!

கேட்: குறட்பாவின் பொருள் இதுதானா?

கிளத்: உருசியனுக்கு இடையூறாயிருக்கும் குறட்பாக்களில் இதுவும் ஒன்று என்கிறேன். அதே நேரத்தில் உருசியன் சொல்லும் பொதுவுடைமைக் கொள்கை விரும்பத் தக்கதன்று என்பதை எடுத்துக்காட்ட எண்ணினேன். திருவள்ளுவர் காணும் பொதுவுடைமைக் கொள்கையே சிறந்தது என்று எடுத்துக்காட்ட எண்ணினேன். 'பெண்கள் காமம் கழிக்கும் எச்சிற் தொட்டிகள்' என்பது உருசியப் பொதுவுடைமை. 'மணம் தேவையில்லை' என்பது உருசியப் பொதுவுடைமை. நாம் பொதுவுடைமையை ஆதரித்தோம் என்றால் உருசியர் கண்ட பொதுவுடைமையை அன்று; திருவள்ளுவர் உள்ளத்தில் உருவாகிய பொதுவுடைமையையே.

கேட்: உங்கள் கட்டுரைக்கு மறுப்பு எழுதினார்களே, அதில் இரப்பாரை இயலாத என்று நீங்கள் எடுத்துக் காட்டிய குறளுக்கு என்ன மறுப்பு எழுதினார்கள்?

கிளத்: உருசியன் மறுப்பு காணுகின்றான். அவன் ஒட்ட சிரைத்தபின், மறுப்பு எழுதுகின்ற குருசாமிக்கு அனுப்புவான். இதைக் கிண்ணத்தில் வாரிக்கொண்டு கிளம்ப இருக்கிறார். என் கட்டுரைக்கு மறுப்பு எழுதினார் குருசாமி. என்னை ஒழித்துக் கட்டும் வேலையைத் தொடர்ந்து நடத்தினார். பெரியாரை ஒருவாறு ஒழித்துக் கட்டிவிட்டதாக அவர் எண்ணியதால், என்னை ஒழித்துகட்ட வேண்டும் என்று குருசாமி எண்ணுவதற்கு காரணங்கள் பல உண்டு. இவற்றில் சிலவற்றை முன்னே கூறியுள்ளேன். இப்போது ஒன்று கூற விரும்புகிறேன். உருசியப்பொது

வுடைமை குருசாமிக்கும் பிடிக்கும். குருசாமி, குஞ்சிதபாதம், சாமி சிதம்பரனார், சிவகாமி' பொன்னம்பலனார் இவர்கள் எல்லோரும் பொது வுடைமையைச் செயலிற் காட்டியவர்கள். தந்நல மற்றவர்கள். இப்போது நான் உருசியப் பொது வுடைமையைத் திருவள்ளுவர் கொள்கைக்கு மாறானது என்று கூறியது அவர்கட்கு பிடிப்காது அதுமட்டுமன்று; இனியும் நான் சொல்லக்கூடும் என்று முற்கூட்டியே தெரிந்து கொண்டிருப்பார்கள் அதனால் என்னை ஒழித்துக் கட்ட வேண்டிய பணியைத் தொடர்ந்து செய்வார்கள். விடமாட் டார்கள் என்னை.

கேட்: விடமாட்டார்கள் என்றுதான் நானும் எண்ணுகின்றேன். இன்று வரைக்கும் குருசாமி விட்டெறிந்த பாராங் கற்கள் எத்தனை? அவைகள் உங்களைப் படுத்திய பாடு என்ன?

கிளத்: மூன்று காலாடிப் பசங்கள் குருசாமிக் குப் பரிந்துகொண்டு கையொப்பமிட்டும் இடாம லும் அஞ்சல் எழுதியிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் சொல்லுகிறார். குருசாமியிடம் நீர் படப் போகும் பாட்டை இப்போது அறியமாட்டீர்என்று. அவருக்கு நான் சொல்ல விரும்பும் விடை இது தான். நாளைக்கு விழ இருக்கும் என் நரைத்த மயிரைக்கூட இன்றைக்கே அசைத்துவிட முடியாது. நான் எவரையும் தனி முறையில் குறைத்துப் பேசிய தில்லை—பேசியவரை விட்டு வைத்ததும் இல்லை. அவர்கட்கு நான் சொல்லும் உண்மையான விடை யால் அவர்கள் திட்டுவார்கள் என்றும் எண்ணிய தில்லை.

குன்றக்குடியாரும், குருசாமியும் பேசிய பேச் சும், எழுதிய எழுத்தும், 'இரப்பாரை இல்லாத என்பது முதலிய வள்ளுவர் குறட்பாக்களை எதிர்ப்

பதுபோல, அல்லது மறந்தது போல இருந்தால் அவர்கட்கு திருவள்ளுவரை நினைவூட்டி மரியாதை யாக எழுதினேன் கட்டுரை. குருசாமி அதற்கு மறுப்புரையா எழுதினார்? என்னை தனிப்பட்ட முறையில் தாக்கினார். அவர் அப்படிச் செய்த தற்கு, அவரைக் கேள்வி கேட்க எண்ணாத கய வர்கள், அவருக்குப் பரிந்து கொண்டு என்னைக் கேட்க வந்தார்களென்றால் இந்தச் சலசலப்பிற்கு நடுங்கிவிடுவதா? இதற்கெல்லாம் நடுங்கலாகாது. தமிழைப் பற்றி தொண்டு செய்ய முன் வந்தவர் என்பதல்லவா என் கொள்கை.

மாப்பிள்ளைமாரைச் சேர்க்கின்றவர்கட்கு உங்கள் உருவப்படம் தேவை.

குருசாமியைப் புகழ்ந்தும் பாராட்டியும் நம்மை இகழ்ந்தும் நமக்கு அஞ்சல் எழுதி அதை நம் குயிலிலும் வெளியிடச் சொல்லுபவர், அவ் வஞ்சலைக் குருசாமிக்கே அனுப்ப வேண்டுகிறேன். அவ்வஞ்சல் குருசாமிக்கு நேரில் உவப்பை உண் டாக்கும்.

மணச்சநல்லூர் மூவேந்தர்' அப்படித்தான் செய்தார்கள்.

இன்று ஒரு கீழ்மகன், தன் முகவரியைக் குறிக் காமல் நம்மைத் தாக்கி ஓர் அஞ்சல் எழுதியுள் ளான். அதில் அவன் திருச்செங்கோடு என்ற ஊர்ப் பெயரும் சுந்தரம் என்ற தகப்பனில்லாத தன் தகவலும் குறித்துள்ளான்.

குயில் 12-4-60

* * * *

கேட்: தமிழர்க்கெனத் திருமணத் திட்டம் உண்டா?

கிளத்: உண்டு! மேலும் அது உலகத்திலேயே சிறந்தது; முதன்மையானது; கால மாறுதலால் அசைக்கமுடியாதது.

கேட்: அது பற்றிக் கேட்கலாமா?

கிளத் : நீர் தமிழ் படித்திருக்கிறீரா?

கேட்: தமிழ் படித்திருப்பதால்தான் கேட்க வந்திருக்கிறேன்.

கிளத்: மகிழ்ச்சி! கேளும்!

கேட்: தொல்காப்பியம் கூறும் திருமண முறையானது தமிழர் திருமண முறையா?

கிளத்: இடைச்செருகல் நீங்கலாக.

கேட்: சிலப்பதிகாரத்திற் காணப்படும் திருமண முறைபற்றி என்ன நினைக்கின்றீர்?

கிளத்: இளங்கோவடிகள், தொல்காப்பியத்தில் புகுந்த இடைச் செருகலுக்கும், தமிழகத்தில் புகுந்த மூடப் பழக்க வழக்கத்திற்கும் செய்யுள் செய்து வைத்தார்.

கேட்: எனவே, தொல்காப்பியத்திற்கும் சிலப்பதிகாரத்திற்கும் அப்பாலான தூய திருமண முறை, திருமணத் திட்டம் ஒன்று தமிழிலக்கியத்தில் இருந்தது என்கின்றீரா?

கிளத் : இருந்தது; இருக்கிறது என்கின்றேன்.

கேட் : யாரும் அறியாத இடத்தில் மறைந்து கொண்டிருக்கிறது என்கிள்றீரா?

கிளத்: எல்லாரும் அறிந்து கொள்ளக்கூடிய இடத்தில் வெளிப்படையாக இருக்கின்றது என்கின்றேன்.

கேட்: நான் படிக்கவில்லையே!

கிளத்: அதுதான் காரணம்!

கேட்: நான் அதைப் படிக்க வேண்டுமானால் நீவிர் அந்த நூலைக் காட்டவேண்டும்.

கிளத்: அதோ உம் கக்கத்தில்

கேட்: இது திருக்குறள்! இதிலா?

கிளத்: திருமணம் என்பது இன்னது, திருமண முறை இன்னது, என்பவை கலப்பில்லாத முறையில் திருக்குறளில் காட்டப்பட்டிருக்கின்றது.

கேட்: விளக்கமாகவா?

கிளத்: ஆம்; தமிழால்.

கேட்: இனிதாகவா?

கிளத்: செய்யுளால்! திருவள்ளுவருக்கே உரிய இணையற்ற நடையால்!

கேட்: அப்படி ஒன்றும் காணப்படவில்லையே?

கிளத்: உமக்குக் காணப்படாததில் வியப்பொன்றும் இல்லை. ஏன் எனில், நீர் நாள்தோறும் திருவள்ளுவரின் திருமண திட்டம் பற்றிப் பட்டி தொட்டியெங்கும் விரிவுரை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றீர்! இல்லையா?

கேட்: நீர் சொல்வது விளங்கவில்லை.

கிளத்: ஓர் எடுத்துக்காட்டு: நீர் அமைந்துள்ள இந்த நிலைமைக்கு மூவர் காரணம்; அவர் உம் தந்தை, தாய், ஆசிரியர். உம் வாழ்க்கைமுறை இந்த மூவர் அடிப்படையில்தான் அமைந்திருக்கும். உம்முடைய ஒவ்வொரு அரிய செயலுக்கும் இந்த

மூவர்தான் காரணம். ஆயினும் இந்த மூவரிடத்திலும் ஒரு புதுமையும் உமக்குத் தோன்றாது. உம் வாழ்க்கை நிகழ்ச்சியிலே என் தந்தைதான் நான் தோன்றக் காரணமானவர்; என் ஆசிரியர் என் புகழுக்குக் காரணமானவர் என்று என்றைக் காவது யாரிடமாவது நீர் சொல்லுவ துண்டோ? அந்த உண்மையான நினைவு உமக்குப் புதுமையற்றது! மிகச்சுருக்கமானது இல்லையா? அது போலத்தான் உன்னால் விரிவாகப் பேசப்படும் தமிழர் திருமணத் திட்டமானது திருவள்ளுவரால் சொல்லப்பட்ட சுருக்கம்! புதுமையில்லாத செய்தி!

கேட்: திருக்குறளில் திருவள்ளுவர் தந்த திருமணத் திட்டம் என்ன?

கிளத்: ஒருவனும் ஒருத்தியும் மறைவாக ஒன்றுபடுகின்றார்கள். வெளிப்படையாகவாழ்க்கை நடத்துகின்றார்கள். பெண்ணிருக்கும் இடத்தைத் தெரிந்து கொள்ள மாப்பிள்ளையின் தந்தை பார்ப்பனனிடத்தில் போவது பற்றியோ, பெட்டி வாணம் கொளுத்துவது பற்றியோ, அம்மி சாஒங்க ரகம் பற்றியோ, தீ வளர்த்துவது பற்றியோ பார்ப்பனனுக்குச் செருப்பும் பருப்பும் கட்டணமும் பொட்டணமும் காலில் வைத்து விழுவது பற்றியோ பேசவேயில்லை திருவள்ளுவர், அவர் கூறியுள்ளது. சுருக்கமல்ல என்றும், மாறுபடாத உண்மைத் திட்டமானதாதலால்.

கேட்: 'அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழி நான்' என்றாள் ஆண்டாளம்மை. இதனால் திருமணத் திட்டத்தில் அம்மியைச் சேர்த்துக் காட்டினார் ஆண்டாள் அம்மை. திருவள்ளுவர் அது போல் ஏதாவது சொல்லவேண்டாமா?

கிளத்: வீட்டில் குப்பையை நீக்கச் சொன்ன வள்ளுவர் வேறு குப்பையைக் கொண்டுவந்து போடச் சொல்லாததற்கு நீர் வருந்தலாமா?

கேட்: வடவர் நூற்களில் எவ்வளவு விரிவாகச் சொல்லியிருக்கிறது, அப்படிச் சொன்னாலன்றோ?

கிளத்: இல்லாததை உண்டு என்று எழுதப் பத்து பதினைந்து நூல்கள்தான் வேண்டும். உண்டு என்பதை எடுத்துக்காட்ட ஒன்றே முக்காலடித் திருக்குறட் காமத்துப்பால் போதாதா? அது கிடக்கட்டும். திருவள்ளுவர் இன்னும் என்ன சொல்ல வேண்டும்! அவர் சொல்லாதவைகளைத்தானே இப்போது நாம் நீக்க வேண்டும்! நீக்க வேண்டும்! என்று கூறிவருகிறோம்.

கேட்: சரி! பெரியார் தமிழில் திருமணம் பற்றிய திட்டம் ஒன்றுமில்லை என்று கூறுகிறாரே?

கிளத்: திருமண முறையில் கோடிக்கணக்கான குப்பைகள், மூடச்செய்கைகள்; முட்டாள்தனமான செலவுகள், நடைமுறைகள், மானக்கேடான செயல்கள் நேர்ந்துள்ளன; இவைகளையெல்லாம் எடுத்துக்காட்டி ஒதுக்கச் சொல்லுகின்றவர் பெரியார் ஒருவர்தாம்! இவர் பேசுகின்ற முறையில் திருமணம் பற்றித் தமிழில் ஒரே இடமாமாக எங்கே விளக்கப்பட்டிருக்கின்றது?

குரல் : 2 குயில் 14—6—60 இசை : 1

* * * *

தினத்தந்தி பற்றி உங்கள் கருத்தென்ன என்றார்க்கு :

வெண்பா

மனத்தந்த வான்மீன்கள் செய்யும் மகிழ்ச்சி
''தினத்தந்தி'' ஓர் இலக்கம், சென்னை
வனத்தினின்று
மாடப்புறாக்களென வையம்அளக் கும்தமிழ்
நாடெப் படிநீ நவில்.

குரல் : 3 குயில் 5–7–60 இசை : 4

* * * *

மணவாள ராமானுசர் :

கேட் : சென்னைப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் இல்லை. யாரைப் போடலாம் என்று எண்ணுகிறது சென்னையரசு. நீங்கள் எண்ணுவது என்ன?

கிளத்: அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராய் இருந்து அருந்தொண்டு செய்தவர்; இப்போதும் பல்கலைக்கழகம் ஒன்றின் துணை வேந்தராய் இருப்பவர் திரு. மணவாள ராமனுசர்தாம். துணைவேந்தராய் இருக்க எல்லாத் தகுதியும் வாய்ந்தவர். அவரையே சென்னைக்கு ஏற்பாடு செய்தால் நலமாய் இருக்கும் வேறு எவரைப் போட்டாலும் இன்றைய நிலையில் சிக்கலே.

**கயிலாயம் அரோகரா !**

கேட்: சீனாக்காரன் மேலும் கடவுள் ஒருவர் இல்லவேயில்லை என்றும் ஒரு கம்யூனிஸ்டு கயிலாயத்தை விழுங்கி விட்டானாம். சிவபிரான் அங்கே இருப்பாரா?

கிளத்: சிவபிரான் என ஒருவர் இருந்திருந்தால் சீனாக்காரன் கயிலாயத்தைப் பிடித்திருக்க மாட்டான்.

**இராவணனுக்கு நேர்ந்தது.**

கேட்: அன்றைக்கு இராவணன் கயிலையைப் பேர்த்தான். சிவபெருமான் சும்மாவிடவில்லை இராவணனை. கயிலையையே தன் பெயருக்குப் பட்டாவாக்கிக் கொண்ட சீனாக்காரனைச் சிவ பெருமான் விட்டுவிடுவாரா?

கிளத்: அன்றைய கதை அடியோடு பொய்! கயிலையைப் பட்டாவாக்கிக் கொண்ட சீனாக் காரன் சிவபெருமானை என்ன செய்துவிட்டான்! ஏன் ஒன்றும் செய்யவில்லை? இருந்தால்தானே?

**தமிழ் படி !**

கேட்: தமிழை நன்கு கற்றால் உள்ளத் தூய்மை உண்டாகும் என்று இராசாசி இயம்பு கிறார். அவர் இதை உள்ளத்தூய்மையோடு கூறு கிறாரா?

கிளத்: வடமொழியில்—வடமொழிஇலக்கியங் களில் அந்த இலக்கியங் காட்டும் கருத்துக்களில் இத்தனை நாள் தடவிப் பார்த்திருப்பார். ஒழுக் கத்துக்கோ நேர்மைக்கோ அங்கு வழியில்லை. தமி ழில் நுழைந்தார். தமிழ் நூற்களின் அருமை பெருமைகளை முரசறைகின்றார்.

**ஆங்கிலம் :**

கேட்: தமிழகத்தில் தமிழ் இருக்க வேண்டிய இடத்திலெல்லாம் ஆங்கிலம் இருக்கட்டும் என்பதை அனைவரும் ஆதரிக்கிறார்கள். நீங்கள் அவர்களைக் குறைத்துப் பேசுகின்றீர்களே?

கிளத்: தமிழ் புதுச்சொற்களையடையும் வரைக்கும் ஆங்கிலம் தமிழகத்தில் இருக்கட்டும் என்று கூறிவருகின்ற பெரியாரை நான் குறை கூற

வில்லை. ஆங்கிலமே தமிழனுக்குத் தாய்மொழி யாய் இருக்கட்டும் என்று கூறுகின்றவன் தமிழன் ஆகான் என்பது என் எண்ணம்.

**இந்தி எதிர்ப்பு :**

கேட்: தி.மு.க. இந்தியை எதிர்த்துப் போர்த் துவக்கம் செய்யப் போகின்றார்கள்: எப்படி முடியும்

கிளத்: அது இந்தி எதிர்ப்பும் அல்ல. போரு மல்ல; நடக்க இருப்பது சம்பத்தை எதிர்க்கும் ஆரவாரம்!

குரல் : 3 குயில் 26–7–60 இசை : 6

* * * *

**முதலமைச்சர் காமராசர் :**

கேட்: முதலமைச்சர் காமராசரின் பிறந்த நாள் கொண்டாட்ட ஊர்வலம் நேற்று சென்னை யில் நடந்தது. அதுபற்றி உங்கள் கருத்து என்ன?

கிளத்: கண்ணீர்த் துளிகள் மக்கள் செல் வாக்கைக் காட்டிக் கொள்வதற்காக இந்தி எதிர்ப்பு கறுப்புக்கொடி காட்டல் ஆகிய கிளர்ச்சி துவக்கி னார்கள். காமராசர் பிறந்தநாள் கொண்டாட்ட ஊர்வலம் தி.மு.க.வின் சலசலப்பை அப்படியே தூக்கிவாரியிற் போட்டுக்கொண்டது.

**வன்சொல் :**

கேட்: செய்தித்தாள் அலுவலகம் தாக்கப் பட்டது சரியா?

கிளத் : ஊர்வலத்தைத் திட்டியதைப் போலவே அதுவும் சரியில்லை.

**கள்ளநோட்டு :**

கேட்: கள்ளநோட்டு வழக்குப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

கிளத்: குற்றவாளிக்குப் பின்னால் அரசினரின் எதிர்க்கட்சியும் ஒளிந்து கொண்டிருக்கலாம்.

**டாக்டர் சிதம்பரநாதனார் :**

கேட்: சென்னை மேலவை உறுப்பினரும், தமிழ் ஆங்கில அகராதி ஆணைக்குழுவின் தலைவருமாகிய டாக்டர் சிதம்பரநாதஞ் செட்டியார் கீழ்நாட்டுக் கலைகள் பற்றி ஆகஸ்டு 4-ந் தேதி உருசியாவுக்கு அனுப்பப்படுகிறார். என்ன பயன்?

கிளத்: தமிழ்க்கலை வடகலையிலிருந்து வந்தது என்று பிதற்றும் ஒருவன் இன்று உருசியாவுக்குப் போவதால் ஏற்படும் தீமையை டாக்டர் சிதம்பரநாதனார் தடுத்தது ஒன்று; தமிழ்க் கலைகள் காலங்கண்டவை என்பதை அவர் அங்கு விளக்குவது ஒன்று ஆகிய இருவகைப் பயன்கள் ஏற்படும்.

**மதம் :**

கேட்: எகிப்து நாட்டில் உள்ள பகால் மதத்தைத் தடை செய்தார் நாசர். அவர்களின் சொத்தைப் பறிமுதல் செய்தார் நாசர்! இங்கு!

கிளத்: இந்த நாவலந் தீவின் உரிமையே மதக் குருக்களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது என்று தான் சொல்லவேண்டும்.

**தி. மு. க.**

கேட்: முதலமைச்சர் காமராசரும், அமைச்சர் சுப்பிரமணியமும் இராசேந்திரப் பிரசாத்திற்குக் கறுப்புக் கொடி காட்டவேண்டும் என்று கெஞ்சுகிறார்களா?

கிளத்: ஆமாம்; பிறகு மிஞ்சுவதற்காக.

**இராசாசி**

கேட்: இந்தியை எதிர்ப்பது என் சொந்தக் கருத்து. என் சுதந்திரக் கட்சியின் நோக்கமன்று என்றார் இராசாசி எப்படி?

கிளத்: கொள்கை முழக்கம் என்பது பல கிளைகளை உடையது. அவற்றில் இது நரி ஊளை எனப்படும்.

கேட்: உரிமைத் தமிழ்நாடு பெறுவதை இராசாசி ஆதரிக்கவில்லையே?

கிளத்: ஆதரித்ததுமில்லை; ஆதரிக்கிறது மில்லை; ஆதரிக்கப் போவதுமில்லை. ஆகையால் தானே இராசாசிக்கு இந்தத் தொல்லை.

**சீனச் சிக்கல் :**

கேட்: சீனாக்காரன் ஏறிக்கொண்டே இருக்கிறானே!

கிளத்: அஞ்ச வேண்டியதில்லை. நம் வீராதி வீரர் மனம் வைத்தால் இரண்டு நாட்களில் ஒரே தாள் ஒரே எழுது கோலால் சேதியை முடித்து விடக்கூடும். ஐயா, சீனாக்காரரே! இந்தியாவை உங்களிடம் முழுதும் காட்டிக் கொடுத்துவிட்டேன் என்று எழுதிவிட்டால் அதன் பிறகும் அவன் ஏறுவதும் இறங்குவதுமான பேச்சுக்கே இடங்கிடையாதல்லவா?

கேட்: தமிழர்கட்கு வரலாறு கிடையாது என்பது பற்றி உங்கள் கருத்தென்ன?

கிளத்: வரலாறு உண்டு என்பது என் கருத்து.

குரல் : 3 குயில் 9–8–60 இசை : 8

* * * *

**பெரியார் :**

கேட்: வீடு இன்னது என்கிறான் வடக்கன். பெரியாரின் அந்த வீட்டினுள் இருந்துகொண்டே காட்டிக் கொடுக்கும் ஒரு முழுமேளத்தனத்தையும் தன்பிள்ளை என்கிறான் வடக்கன். பெரியாரின் உள்ளே இருந்து கொண்டே கீழறுக்கும் அரை மேளத்தையும் அப்படித்தான் எண்ணுகின்றான். பெரியாரே! இவர்களை அடக்க முடியாதா உங்களால்?

கிளத்: வீட்டை மீட்டுக் கொண்டபின் இந்தப் பசங்களைத் தூணில் கட்டி வைத்து உரிக்க வேண்டும் தோலை.

குரல் : 3 குயில் 16—8—60 இசை : 9

* * * *

**ஈ. வி. கே. சம்பந்**

கேட்: ஈ.வி.கே. சம்பத்தின் நிலை என்ன?

கிளத்: இந்தியைத் தமிழ்நாட்டில் புகுத்தித் தமிழைத் தொலைத்துவிட வேண்டும் என்னும் இராசேந்திரப் பிரசாத்துக்குக் கருப்புக் கொடி காட்டும் நிலையை உண்டாக்கினவர் சம்பத்து. இது தி.மு.க.வுக்கும் சிறப்பாக அண்ணாத்துரைக்கும் பிடிக்காவிட்டாலும் கறுப்புக்கொடி காட்டத்தான் வேண்டும் என்று மேலுக்குச் சொல்லிவிட்டுப் பிறகு ஏதோ நொண்டிச் சாக்குக் காட்டிப் பின் வாங்கச் செய்துவிட்டார். இதில் அண்ணாதுரை, அரசுக்கு நல்லபிள்ளை ஆகிவிட்டார். இதன் தொடர்பாக அரசினரையும் அவர் கண்டு பேசினார். இது மறைவான நிகழ்ச்சி. இன்று சம்பத்து மேல் வழக்கு வந்திருக்கிறது. நாட்டின் குற்றம் அமைச்சர்களையும் சாரும் என்று அவர் சொன்னாராம்.

**குருசாமிக் குடுக்கை**

கேட்: சில ஊர்களில் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த சிலர் ஊராட்சி மன்றத் தேர்தல்களிலும் நகராட்சி மன்றத் தேர்தல்களிலும் போட்டியிட்டு இருக்கின்றார்கள். அவர்கள்மேல் நடவடிக்கை எடுக்கப் போகிறேன் என்று வேலூரில் சா. குருசாமி சாக்குருவியாகக் கத்தினாராம். குடுக்கை குடுகுடுக்கின்ற மாதிரிதான் இது. அறிவூட்டமுள்ள பேச்சன்று. தேர்தலில் நிற்கும் காங்கிரசு உறுப்பினரை ஆதரித்துப் பேசியவர்களில் குருசாமியும் ஓர் ஆள். அப்படிப் பேசியதைக் குருசாமி கூலிப் பறை என்று எண்ணியிருப்பதாய்த் தெரிகின்றது.

கிளத்: அச்செயல் தேர்தலில் நிற்பதை ஆதரித்ததல்லவா? அதற்காகத்தான் தி. க. தோழர் தேர்தலுக்கு நிற்பதாயின் சொல்லிவிட்டுச் செய்யுங்கள் என்றார் பெரியார். மூளையில் நகர்த்தி வைத்த குந்தாணிக் குருசாமி நகரப் போகின்றதாம். நடவடிக்கை எடுக்கப் போகின்றதாம். எந்தத் தேதி? எத்தனை மணிக்கு?

**ப. சீவானந்தம்**

கேட்: சீவானந்தம் எப்படி?

கிளத்: சீவானந்தம் தம் கொள்கையைச் சிறிதும் விட்டுக் கொடுக்காதவர். அது பற்றி அவரைப் புகழத்தான் வேண்டும்.

குரல் : 3 குயில் *16–8–60* இசை : 8

* * * *

கேட்: கோவை மாநாட்டில் இலக்கியம் என்பது தமிழா, வடசொல்லா என்பது பற்றிப் பேச்சு ... சொல்வது மெய்யா?

கிளத்: இலக்கணம் என்ற சொல்லைப் பற்றித் தான் பேச்சு நடந்தது. என் தலைமையில் சோம சுந்தர பாரதி பேசியபோது இலட்சணம் என்ற வடசொல்லின் சிதைவே இலக்கணம் என்று கூறினார். அவருக்குப்பின் பேசவந்த பன்மொழிப் புலவர் அப்பாதுரையவர்களையும், புலவர் வெள்ளைவாரணனாரையும், ஒளவை துரைசாமி அவர்களையும் நான், உங்கள் சொற்பொழிவின் இலக்கணம் தமிழா வடசொல்லா என்பது பற்றியும் விளக்குங்கள் என்று கேட்டுக்கொண்டேன். தமிழ் மாணவர்கட்கும், தமிழறிஞர்களுக்கும் இதில் ஆசை; இதை அறிய விரும்பியதை நான் தெரிந்து கொண்டே இவ்வாறு கேட்டுக் கொண்டேன். அவர்களும் அதுபற்றித் தத்தம் கருத்துக்களைத் தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கது.

இதற்கு நடுவில் இலக்கணம் தமிழா? வடசொல்லா என்ற ஆராய்ச்சி இப்போது தேவையா என்று கருணாநிதி சொன்னார். நான் அதற்கு மறுப்பாக "கருணாநிதிக்கு இதில் பயிற்சி போதவில்லையானால், இலக்கணச் சொல்லின் ஆராய்ச்சியே பயனற்றதாகி விடாது. தமிழ் பற்றிய மாநாட்டில் கட்டாயத் தேவையே என்று கூறிய அளவில், கருணாநிதி, 'நான் இடைநேரத்தில் இங்கு வந்தேன். ஆதலால் இவ்வாறு கூறிவிட்டேன்' என்று மன்னிக்கக் கேட்டுக்கொண்டார்.

மாநாட்டின் முடிவில் நான் முடிவுரை தொடங்கினேன். இலக்கணம் தமிழா வடசொல்லா என்பது பற்றிய என் கருத்தைத் தெரிந்து கொள்ள கூட்டத்தார் மிக்க ஆவலாயிருந்தார்கள்.

பல தமிழறிஞர்கள் தனி முறையில்என்னைச் சூழ்ந்து கொண்டனர். இலக்கணம் தமிழா வடசொல்லா என்பதை விளக்கும்படி கோரினார்கள்.

மணிமேகலையில் சமயக் கணக்கர் காதையில் இலக்கணம் தொடர்ந்து என்று வருவதால் இலக்கணம் என்பது தமிழ்ச் சொற்றொடரே என்பதை விரிவாக விளக்கி மக்கள் மனதை அமைதியாக்கி அனுப்பினேன்.

குயில் 11-10-60

* * * *

**பார்ப்பாரிற் கோழியும் நாயும் புகல் இன்னா :**

கேட்: இன்னா நாற்பது என்னும் நூலில் இச் செய்யுள் காணப்படுகிறது. இந்த அடியின் பொருளை நோக்கும்போது பார்ப்பனர் ஒழுக்கமுடையவர் என்பதும், ஆதலால் அவர்கள் உயர்ந்தவர் என்பதும் தெரிகின்றன அல்லவா? இதை நீவீர் மறுக்கின்றீர்களா?

கிளத்: இவ்வாறு நண்பர் வேலாயுதன் நமக்கு எழுதுகின்றார். நண்பர் இவ்வடியின் பொருளைத் தெரிந்து கொண்டாரா என்பது தெரியவில்லை.

அதன் பொருள் வருமாறு :

பார்ப்பாரில்—பார்ப்பாரைப் போலவே, கோழியும், நாயும்—கோழிகளும் நாய்களும், புகல்—தமிழர் வீட்டினுட் புகுதலால், இன்னா — தீமையாகும்.

பார்ப்பாரில் என்பதிலுள்ள இல் போல என்ற பொருளுடைய இடைச்சொல். ஐந்தாம் வேற்றுமை உருபு. ஒப்புப் பொருளில் வந்தது என்பார்கள்.

பார்ப்பான் தமிழர் வீட்டில் நுழைந்தால், தீமை உண்டாவது போலவே கோழியும் நாயும் புகுந்தாலும் தீமை உண்டாகும் என்பது இதன் கருத்து.

புகல்—புகுதல். புகுதல் என்ற சொல்லைக் கொண்டு வீட்டில் புகுதல் என்று பொருள் கொள்ள வேண்டும். இவ்வாறு கொள்வது அவாய் நிலை என்பர்.

பார்ப்பான் தமிழர் வீட்டில் புகுவது ஏன்? தமிழரை ஏமாற்ற.

என்ன தீமை? செல்வ இழப்பு, கலகம், மடமைபுகுதல்.

கோழியும், நாயும் புகுவது ஏன் ? —பொறுக்கித் தின்ன. என்ன தீமை? பண்டங்களைத் திருடுகின்றன. வாய் வைத்துத் தூய்மை கெடுகின்றன. வெளிக்கிருந்து வைக்கின்றன.

குயில் 18—10—60

* * * *

கேட்: புரட்சிக் கவிஞர் புதுவையிலே இருக்கின்ற வரை அவருக்கு நிலை தெளிவு ஏற்படாது என்று விளக்கமாக நானே அவருக்கு கடிதம் எழுதினேன் என்று குருசாமிக்கு வேண்டிய தோழர் ஒருவர் எழுதுகிறார். அவ்வாறு அவர் எழுதிய அஞ்சலுக்கு நீங்கள் பதில் எழுதினீர்களா?

கிளத்: ஆம்; எழுதினேன். அந்த அஞ்சலில் சென்னையில் குருசாமி வீட்டில் நான் தங்க முடியாது என்பதை நன்றாய் விளக்கி இருந்தேன்.

கேட்: பாவேந்தர் இருந்த இடம் பாண்டிச்சேரிதானே என்று குருசாமியைப் பிடித்திருக்கும் ஓர் ஆள் எழுதுகின்றாரே! புதுச்சேரியில் எப்போ

தும் நீங்கள் இருப்பவர் என்பதில் ஐயப்பாடு அவருக்கு ஏன் ஏற்பட வேண்டும்?

கிளத்: நான் பிறந்ததும், என் முன்னோர் பிறந்ததும் நான் என்றும் இருந்து வருவதும் புதுச்சேரிதான்! குருசாமி, குஞ்சிதம் பொன்னம்பலனார் முதலியவர்களும் என் வீட்டிற்கு வருவதுண்டு நான் என் வீட்டில் இடமில்லை என்று சொல்லுவதுண்டு. புதுவையைச் சேர்ந்த ஊசிட்டேரிக்கு அவர்கள் செல்லுவதுண்டு. அவர்களும் அந்த ஏரி மதகடியில் பொதுவுடைமை நாட்டியம் ஆடித் திரும்பி வருவதுண்டு. தனியுடைமைக்காரர் போலவே என் வீட்டில் உண்டு போவதுண்டு. அவர்கட்கும் தெரியும், நான் என்றும் புதுச்சேரியில் வாழ்பவன் என்பது.

கேட்: அவருக்கும் இன்றையவரை மனமயக்கம் தெளியவில்லை; விட்டுவிட்டோம் என்று குருசாமியின் நண்பர் எழுதுகின்றார்.

கிளத்: அவர் பிடியிலிருக்கும் வரைக்கும்மனத் தெளிவு எனக்கு இருக்கின்றதாம். அவர் பிடியினின்று நான் தப்பித்துக் கொண்டால் எனக்கு மனமயக்கம் ஏற்படுகிறதாம். நான் இன்றுவரை எழுதி வெளியிட்டுள்ள நூற்கள் 60. அவற்றை சிலவற்றை வெளியிட்டுப் பிழைத்தார்கள். அவர்களுக்கு என் நூலைப் பொருத்தவரைக்கும் உண்மைக் காதல் உண்டு. அவர்கள் தோல் விற்றும் என் நூலை வாங்கிப் பிழைக்க அளவற்ற ஆசை உண்டு. அவர்களின் ஆசையை நிறைவு செய்ய என்னால் எத்தனை காலத்திற்கு முடியும். பெரியாரும் அதை வெளியிட ஆசைப்பட்டார். இல்லை என்றா சொல்வது? கொடுத்தேன் அவ்வளவுதான். எனக்கு மனமயக்கம் வந்துவிட்டதாகத் தானே அவர்களுக்குத் தோன்றும்.

விட்டாராம் என்னை! இன்னும் பிடித்துக் கொண்டா ஆட்டிக் கொண்டா இருப்பார்? எனக்கும் ஆண்டு 70 ஆகிவிட்டது.

குயில் 25-10-60 இசை 19

* * * *

கேட்: தி.மு.கழகத்துக்கும் இராசாசிக்கும் இதுவரை எவ்வித ஒப்பந்தமும் ஏற்படவில்லை என்றார் அண்ணாத்துரை. அதுபற்றி நீங்கள்?

கிளத் : விரைவில் ஒப்பந்தம் ஏற்படும்; அதி விரைவில் ஒப்பந்தம் முறிந்துவிடும்.

கேட்: வெளிநாடுகளிடமிருந்து இந்தியா கடன் வாங்குவது மானக்கேடு ஆகாதென்று அமைச்சர் சுப்பிரமணியம் சொன்னார்.

கிளத்: அது மானக்கேடானது என்று சுப்பிர மணியம் எண்ணுவதால் இப்படிச் சொன்னார்.

கேட்: மேற்கு வங்காள அரசின் எல்லையில் இருக்கும் பெருபாரி என்ற நிலப்பகுதியைப் பாகிஸ் தானுக்குக் கொடுத்துவிட வேண்டியதுதான் என்று தலைமை அமைச்சர் நேரு கூறினார். அவர் செய்த இந்த முடிவு சரியா?

கிளத்: நேருவுடனிருந்தும், மற்ற அமைச்சர் களும் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து கொண்டு வருகின்றார்கள். ஆகையால் நேரு செய் ததை எதிர்க்கவில்லை. எதிர்க்காதவரைக்கும் நேரு செய்தது சரி என்றே எண்ணப்படும்.

கேட்: சுதந்திரக் கட்சியில் சேரும்படி அமைச் சர் சுப்ரமணியத்திற்கு இராசகோபாலாச்சாரி அழைப்பு அனுப்பி இருக்கிறார். சுப்பிரமணியம் சேருவார் என்பதற்கு அறிகுறி ஏதாவது உண்டா?

கிளத்: சேரமாட்டார் என்பதற்குத்தான் என்ன அறிகுறி இருக்கிறது?

கேட்: என். ஜீவரத்தினம் நான் ஏன் தி.மு.க.வை விட்டு விலகினேன்என்பது பற்றிக் கூட்டத்தில் விளக்கப் போகிறாராம். விலக்கியதற்குக் காரணம் உங்களுக்குத் தெரியுமா?

கிளத் : தி.மு.க.வில் எல்லோரும் நடந்து கொள்ளுகிறமாதிரி நடந்து கொள்ள வேண்டும். அது ஜீவரத்தினத்திற்குத் தெரியவில்லை. பொதுப் பணத்திலிருந்து ஒரு காசைக்கூட இதுவரைக்கும் திருடாததால்தானே! திருடாத ஜீவரத்தினங்களுக்குத் தி.மு.க.வில், என்ன வேலை? ஜீவரத்தினத்தை இயக்கத்தை விட்டுத் தொலைக்க அவர்கள் பட்டபாடு அக்கிரகாரத்து நாய்ப்பட்டிருக்குமா?

கேட்: கோயில் கட்டுவது ஏழைகளின் நன்மைக்காகத்தான் என்று பக்தவத்சலம் பகருகின்றார். சரிதானா அது?

கிளத்: நூற்றுக்கு நூறு சரி! பணக்காரரைச் சுரண்டக் கட்சிகள் ஏற்பட்டு விட்டன. இப்போது கோயில்கள் ஏழைகளின் தாலியைத் தாமே ஒட்ட ஒட்ட அறுத்து வருகின்றன.

கேட்: சென்னை அரசு காட்சிச் சாலையில் வந்துள்ள மனிதக் குரங்கினிடம் அமைதியில்லாததால் அது ஆப்ரிக்க விலங்கு என்று தெரிகிறதாம். பேச்சில்லாதது கொண்டு என்ன தெரிந்து கொள்ளலாம்?

கிளத்: அதன் தாய்மொழி சமசுகிருதம் என்று தெரிந்து கொள்ளலாம்.

குரல் : 3 குயில் 27–12–60 இசை 28

* * * *

கேட்: புறநானூறு பார்ப்பனர் பாதுகாப்பு நூலா?

கிளத்: தமிழைப் பாதுகாக்கும் நூல்.

கேட்: 'கண்ணி கார்நறுங் கொன்றை' என்று தொடங்கும் செய்யுள் புறநானூற்றின் முதற் செய்யுளாகக் காணப்படவில்லையா?

கிளத்: காணப்படும்படி புறநானூற்றில் இடைச் செருகலாக்கப்பட்டது. அச்செய்யுள்கூடப் பார்ப்பனரைப் பாதுகாக்கும் கருத்துடையதல்ல. பிறர்தம் மதம் மேற்கொண்டு களைவதே. அச் செய்யுள் சிவன் பெருமை கூறிச் சைவத்தில் மக்களை இழுக்கின்றதென்று இக்காலப் புலவர் எண்ணுவதில் வியப்பில்லை. சைவனால் புகழப்படும் ஒருவன் வையத்துள் வாழ்வாங்கு வாழ்கின்ற ஒரு தமிழனே என்கின்றது. அச்செய்யுள், அருந்தவம், வையத்துள் வாழ்வாங்கு வாழும் முறைகளில் ஒன்று. அம்முறைகளில் அது சிறந்த முறையுமாகும். தவம்புரிவார் எல்லாம் தையலார் வலைக்குத் தப்பார் என்று காட்டித் தவத்தை இழிவு படுத்துவோர், ஆரியரும் அவர் வழி வந்தவராய் எண்ணப்படும் பார்ப்பனரும், மேலும் வேத நூற் பிராயம் நூறு என்று கூறி தவநெறிக்கு இழுக்குத் தேடுவார் அவர். அவ்வகையினர் அல்லர் தமிழர் 'கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு' என்ற குறட்பாவை நோக்குக. தமிழர், தவம், தையலார், மையலுக்கு அப்பாற்பட்டதென்பதும் சாவாமையை நல்கும் என்பதும் வெள்ளிடைமலை. எனவே பார்ப்பனரை எதிர்ப்பதே அச்செய்யுட் கருத்தென அறியவேண்டும்.

கேட்: அறங்கூற வந்த நூல் ஆகிய புறநானூற்றில், ஒரு மதத்திற்குரிய சிவனை நினைப்பூட்டுவதிற் சிறப்பென்ன இருக்க முடியும்?

கிளத்: அச் செய்யுள் பிற்காலச் செய்யுள். அப்பிற்கால நிலை, நாட்டில் சிவன் புகுந்த நிலை: ஆதலால் அச்சிவத்திற்குச் சொல்லப்படும் பெருமையை இழுத்துப் போட்டுத்தானே வேரை வெட்டவேண்டும்.

கேட்: இதற்குத்தான் இவ்வாறு அமைவு கூறி விட்டீர். மதத்தைக் குறிக்கும், சாதியைக் குறிக்கும் செயயுட்கள் இன்னும் சில புறநானூற்றில் இருக்கின்றன. அவற்றிற்கு என்ன கூறுவீர்.

கிளத்: அவையும் இடைச் செருகல்களே! அது போகட்டும். சில செய்யுட்கள் சரியில்லாவிட்டால் அது கொண்டு பல செய்யுட்களையும் ஒழித்துக் கட்ட முயலுவதா? இஃது எவன் செய்யும் வேலை? 'குணம் நாடிக் குற்றம் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல், என்பதையும் நோக்குக.

கேட்: இந்தக் காலத்தில்தான் சீர்திருத்தம் இருக்கின்றது; இந்தக் காலத்தில்தாம் தமிழர் தலைவர் இருக்கின்றார்கள். அந்தக் காலத்தில் இல்லவேயில்லை என்பது பொய்யா?

கிளத்: அந்தக் காலத்திலும், சீர்திருத்தக் காரரர் இருந்தார்கள். அந்தக் காலத்திலும் தமிழ் தெரிந்த தமிழர் தலைவர்கள் இருந்தார்கள் என்பது பொய்யாகா.

கேட்: அந்தக் காலச் சீர்திருத்தக்காரர்களும் தமிழ் தெரிந்த தமிழர் தலைவர்களும் கண்டது என்ன? — தோல்விதானே!

கிளத்: அந்தத் தோல்வியில் தோன்றியது தான் இந்தக் காலச் சீர்திருத்தம். அந்தத் தோல்வியில் தோன்றியவர்கள்தாம் இக்கால தலைவர்கள். அந்தத் தலைவர்களும் தோற்கப் போவது உறுதி.

அந்த தோல்வியிலிருந்து அவர்கள் தமிழை ஆதரிக்கும் பண்பைப் பெறப் போகின்றார்கள் என்பதும் உறுதி!

கேட்: அரசியல் தலைவர் இந்நாள் தமிழை ஆதரிக்கின்றார்களா?

கிளத்: இந்திக்கு வழிகோலும் அளவுக்கு.

கேட்: மக்கள் தலைவர்?

கிளத்: அரசியல் தலைவர்களை மகிழ்விக்கும் என்று எண்ணித் தமிழையே ஒழிக்க முற்படுகிறார் என்று எண்ண வேண்டியிருக்கிறது. இந்தியைப் புகுத்தும் வடக்கத்தியனையும் அவர்கள் எதிர்க்கிறார்கள் என்று எண்ண வேண்டிய திருக்கிறது.

குயில் 3–1–61

*　　*　　*　　*

கேட் : அண்ணாத்துரையை அடக்குவது பெரியார் பொறுப்பு என்ற கருத்தில் காமராசர் பேசினாரே!

கிளத்: நாங்களா அழைத்தோம் பெரியாரை என்று காமராசர் இனிக் கூறமாட்டார்.

கேட்: சுப்பிரமணியம் தேர்தல் முடிந்தபின் சொன்னது :

'நாங்கள் வெற்றி பெற்று விடுவோம் என்று பெரியார் முன்கூட்டியே தெரிந்து கொண்டதால் எங்களை ஆதரித்தார். நாங்கள் அவரை வேண்டிக் கொள்ளவில்லை' என்று.

இப்போது?

கிளத்: தாம் தோல்வி அடையக் கூடும் என்று எண்ணுவதால் பெரியாரை வேண்டிக் கொண்டிருக்கிறார் என்பது தெளிவு.

கேட்: தமிழ்நாடு என்று பெயர் வைக்காததை எதிர்த்துக் களத்தில் குதிக்கப் போகிறார் ம.பொ. சி. தம் தொண்டர்களையெல்லாம் கையிற் போட்டுக்கொண்டு.

கிளத்: நல்ல காரியம். ஆனால் அவர் நடுவில் ஆச்சாரியார் சொல்லை காதிற் போட்டுக் கொள்ளக்கூடாது.

கேட்: கிட்டயிருந்தே கீழறுக்கும் மட்ட உருப் படிகளைப் பெரியார் நீக்காதது ஏன்?

கிளத்: பெரியாரால் ஒன்று முடியாது இருக்குமானால் அது இயக்கத்தினின்று எந்த ஆளையும் நீக்க முடியாததுதான்.

கேட்: குருசாமியை ஆதரிக்காத எவரும் எங்கும் கூட்டத்தில் பேச முடியவில்லையாம். குருசாமியின் துக்கடாக்கள் அங்கங்கே சண்டைக்கு வருகிறார்களாமே?

கிளத்: மண்டைப் பூச்சி உளறுகிறது.

கேட்: தமிழை ஒழிக்க முடியுமா?

கிளத்: முட்டாள்தனமான கேள்வி. தமிழும் தமிழரும் வேறு வேறு அல்ல.

கேட்: தமிழரை எதிர்க்கும் இலங்கைக் கிளி இங்கே ஏன் வந்தது?

கிளத்: தலைவர்களின் நெஞ்சக் கிணற்றில் தமிழ் உணர்வு உண்டா என்று எட்டிப் பார்க்க வந்தது.

கேட்: அவரவர், தேர்தல் முயற்சியில் ஈடு படுகையில் ஆதித்தனார் என்ன பண்ணுகிறார்?

இளத்: தாம்பரத்தில் சடுகுடு!

கேட்: ஆச்சாரி என்ன எண்ணுகிறார்?

இளத்: எந்தக் கட்சியை எப்படி இழுப்பது? எப்படி ஏய்ப்பது? — என்று.

கேட்: அண்ணாத்துரை என்ன பண்ணுகிறார்?

இளத்: தேர்தலில் நிற்க என் கட்சி ஆட்கள் நூற்றுக்கு எத்தனை பேருக்கு ஆச்சாரி வாய்ப்பு கிடைக்கும் என்று.

கேட்: அரிவாள், சுத்தி என்ன செய்கிறது?

இளத்: ஆச்சாரியார் நமக்கு அதிக ஆதரவு தருவாரா? கண்ணீர்த்துளிகளுக்கா? என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

குரல் : 3 குயில் 10-1-61 இசை 30

* * * *

கேட்: ஆங்கிலம் படிக்காவிட்டால் பேசவும் எழுதவும் வருமா?

இளத் : நெஞ்சத்தினின்று சொந்த ஊற்று வற்றாமல் பேசவரும், எழுதவரும்.

கேட்: ஆங்கிலம் படித்தவர்களுக்கெல்லாம் சொந்த ஊற்றுத் தூர்ந்துபோய் விட்டதா?

இளத்: எழுதுவதின் தலைப்புகூட ஆங்கிலத்தின் மொழிபெயர்ப்பே.

கேட்: ஆங்கிலம் படிக்காவிட்டால் தமிழில் இப்போது வெளிவந்துள்ள கதைகள் அனைத்தும் வெளிவந்திருக்குமா?

கிளத்: கற்பனை உள்ளம் வளர்ச்சி அடைந்திருக்கும். தமிழர் பண்பாடு பாதுகாக்கப்பட்டிருக்கும் நல்ல நல்ல கதைகள் காலத்தால், இடத்தால் அழியாதனவாக உண்டாகியிருக்கும்.

கேட்: ஆங்கிலம் படித்த தமிழ்ப் புலவர்களால் அல்லவா தமிழகம் உருப்பட்டு வருகிறது.

கிளத்: ஆமாம்; அவர்களால்தாம் தமிழகம் உருப்படாது போகின்றது. எ.கா., தெ.பொ.மீ.

கேட்: தமிழ்ப் புலவர் ஆங்கிலம் படிக்க ஆசைப்படுவானேன்?

கிளத்: அப்படி ஒரு புலவரையும் காட்ட முடியாது.

கேட்: ஆங்கிலம் படித்த தமிழர் தமிழுக்கு வருவதுண்டா?

கிளத்: தமிழன்னையின் திருவடி தொட்டதால்தான் ஆங்கிலப் பட்டப்படிப்பினர் உருப்பட முடிந்தது. எ.கா., சோமசுந்தர பாரதி, சேதுப் பிள்ளை, தெ.பொ.மீ. வையாபுரி பிள்ளை, இப்படி ஆயிரம் பேர். நான் ஆங்கிலம் பேசுவேன். தீந்தமிழில் பேசும் பழக்கமில்லை என்று கூறிய பலர், கூட்ட நடுவில் உதைபட்டிருக்கிறார்கள்.

கேட்: ஆங்கிலேயன் ஆண்ட இருநூறு ஆண்டுகளில் தமிழர் ஆங்கிலம் படிக்காதிருந்தால் முன்னுக்கு வந்திருக்க முடியுமா?

கிளத்: முன்னுக்கு வந்திருக்க முடியும் என்பது மட்டுமன்று ,ஆங்கிலேயனும் இருநூறு ஆண்டுகள் இங்குத் தங்கியிருக்க முடியாமற் செய்திருக்கலாம்.

கேட்: ஆர். கே. சண்முகனார் ஆங்கிலம் படிக்காவிட்டால் புகழ் கிடைத்திருக்குமா?

கிளத்: அவர் தமிழ் படிக்காததால் தமிழகத்தில் பட்டபாடு எது படும்?

கேட்: ஆங்கிலம் படித்திராவிட்டால் ஏ.ஆர். இராமசாமிக்கும், இலக்குமணசாமிக்கும் உலகப் புகழ் உண்டாகியிருக்குமா?

கிளத்: உலகப் புகழ் என்பது தாம் பிறந்த தமிழ் நாட்டு மொழியை எதிர்ப்பதுதானா? அவர் பெற்ற உலகப் புகழால் தமிழுக்கு என்ன நன்மை? ஐந்து பேரைத் திருமணம் செய்து கொண்டவள் கற்புக்கரசி என்று கூறும் ஆரியர் ஒழுக்கத்திற்குத் தானே மேல் நாடுகளில் சென்று சப்பைக் கட்டுக் கட்டி வருகிறார்கள்.

கேட்: விஞ்ஞானத்திற்குரிய சொற்கள் தமிழில் வேண்டும் என்று தலைவர்கள் சொல்லுவதில் தப்பென்ன?

கிளத்: தமிழில் வந்து கொண்டிருக்கும் விஞ்ஞானச் சொற்களை அவர்கள் இடைமறிக்கிறார்கள். நல்லெண்ணத்தால் சொல்லவில்லை. தமிழில் தமிழர்க்கு இருந்துவரும் பற்றை ஒழிப்பதே அவர்களின் நோக்கம்.

கேட்: பார்ப்பனத் தலைவன் இந்தியை எதிர்க்கிறான்; நல்லெண்ணத்தோடா?

கிளத்: நல்லெண்ணமிருக்க வழியில்லை. தமிழ்த் தலைவர்களில் நாம் தமிழர் இயக்கத் தலைவர் தவிர மற்றவர் அனைவரும் இந்தியை ஆதரிக்கிறார்கள். கெட்ட எண்ணமே காரணம்.

குயில் 17-1-61

* * * *

கேட்: ஆட்சி செய்யக் காமராசர் அறிவு தரப் பெரியார் என்ற மாட்சிக்கு மறுப்பும் உண்டோ?

கிளத்: நாட்டுக்கிதை உணர்த்தியவன் நான் தான். அவர்கள் நறுந்தமிழின் திறந்தெரிந்து நடக்க வேண்டும் என்று அறங்கூறி வருபவனும் நான்தான்! நான் தான்!

கேட்: பெரியார் பெருந்தொண்டை ஆதரிக் கின்றீரா?

கிளத்: நாற்பதாண்டாய்ப் பெரியார் செய்து வரும் நல்லதொண்டு ஒன்று; இடையில் அவர் மேற்கொள்ளும் கூலித் தொண்டு மற்றொன்று. பின்னதை வெறுக்கின்றேன், முன்னதை நான் நாற் பதாண்டுகளாக ஆதரித்துள்ளேன்; அண்ணாத் துரையைப் போலல்ல; குருசாமியைப் போலல்ல.

கேட்: தமிழ்நாடு என்று பெயர் வைக்கமறுப் பதால் என்ன கெட்டுப் போகும்?

கிளத்: வடக்கனுக்கும் மலையாளிக்கும் தெலுங்கனுக்கும் கன்னடனுக்கும், சுடுகாடும் குடி யிருப்பும் ஆகிய பொது நாடு இந்த நாடு. இது நேருவின் மோச நிலைமை. அடியோடு மாற வேண்டுமானால் இது தமிழ்நாடு என்று இயற் பெயர் அடையவேண்டும். எதிரியின் எண்ணம் வேறு மாய வேண்டும்.

கேட்: நகர மன்றக் கல்வி அதிகாரியாகக் குஞ்சிதத்தைப் பெரியாரும், காமராசரும், சுந்தர வடிவேலும் ஆதரிக்கிறார்கள். அவர்கட்கு நீங்கள் சொல்லும் திருத்தம் என்ன?

கிளத்: ஆதரிப்பதை எதிர்க்கின்றவனை எதிர்க்க முடியாவிட்டால் இவர்கள் நாக்கை பிடுங்கிக்கொண்டு சாகவேண்டும்.

குரல் : 3 குயில் 7—2—61 இசை : 34

* * * *

கேட் : பேனா—என்ன சொல்?

கிளத்: ஆங்கிலம்! இறகு எனல் வேண்டும். முற்காலத்தில் பறவைகளின் இறகைச் சீவி மை தொட்டு எழுதினார்கள். அதனால் வந்த பெயர் அது.

கேட்: பௌண்டன் பேனா?

கிளத்: மையூற்று இறகும் ஊற்றிறகு என்றெல்லாம் சொல்லிக் கொள்ளலாம்.

கேட்: இங்கி.

கிளத்: ஆங்கிலம்! மை எனல் வேண்டும்.

கேட்: பேப்பர்?

கிளத்: தமிழில் தாள் என்று சொல்க. முதற்பாலத்தில் பனை முதலியவற்றால் எழுதினார்கள். அதனால் அப்பெயர் வந்தது. ஏடு என்பதும் தூய தமிழ்ச்சொல். ஏடு என்பது இந்நாளில் செய்தி ஏடுகளுக்கும் பெயராக வழங்குகிறது; நூலுக்குச் சுவடி எனல் வேண்டும். தினசரி ஏட்டை நாளேடு எனல் வேண்டும். தினசரி என்பதில் தினம் வட சொல், சரி என்பது செறி என்பதன் மரூஉ.

கேட்: சட்டை என்ற சொல்லின் வரலாறு வேண்டும்.

கிளத்: பறவைகளின் மேல் மூடியிருக்கும் இறகுக்குச் செட்டை என்பார்கள். பண்டு தமிழில் ச மொழிக்கு முதலில் வருவதில்லை. பின்னாளில் அது மொழிக்கு முதலில் வரலாயிற்று. அப்போது செ என்ற எழுத்து என்றாயிற்று. எனவே செட்டை என்பது சட்டையாயிற்று. பறவைகள் போலவே மக்களும் ஏற்படுத்திக் கொண்டார்கள். துணியால் தைப்பது சட்டை அல்லது செட்டை.

கேட்: துணியின் பெயர் என்னென்ன? அதன் காரணம் என்ன?

கிளத்: துணித்தலால் துணி ஆயிற்று. துண்டித்தலால் துண்டு ஆயிற்று. கிழித்தலால் கிழி ஆயிற்று. அறுத்தலால் அறுவை ஆயிற்று. வெட்டுதலால் வேட்டி ஆயிற்று.

கேட்: கவிதை, தமிழ்ச் சொல்லா?

கிளத்: கவி முதனிலை. த் எழுத்துப் பேறு. ஐ தொழிற் பெயர். இறுதிநிலை. கவிகை என்பது போல. கவிகை ஓர் இடத்தை நோக்கிக் கவிழ்ந்திருப்பது. குடையைக் குறித்தது. கவிதை என்பது மனம் ஒரு பொருள் நோக்கி கவிவது அல்லது சூழ்வது, ஆராய்வது என்பனவும் பொருளாகக் கொள்க. எனவே கவிதை தூய தமிழ்ச்சொல்.

கவிஞர் என்பதில் கவி முதனிலை. அர்—பலர் பால் இறுதி நிலை. ஞ் பெயர் இடைநிலை. இதை வடவர் கவிக்ஞர் என்பர். க் என்ற எழுத்தை அவர் உடன் சேர்த்ததால் அதுவட சொல்லாய்விடாது. மலைக்குத் திருநாமம் போட்டுவிட்டால் அது வைணவச் சொத்தாகிவிடுமா?

குயில் 15—4—62

*       *       *       *

கேட்: அனைத்துலகத் தமிழ்க் கவிஞர் பெரு மன்றம் என்றால் என்ன? எங்கே?

அதன் செயல் முறை என்ன?

இப்போது சென்னையினின்று வெளிவந்து கொண்டிருக்கும் குயிலுக்கும் மேற்கண்ட பெரு மன்றத்துக்கும் என்ன தொடர்பு?

கிளத்: இவற்றிற்கெல்லாம் ஒரே விடைதான் உண்டு. குயிலைப் படியுங்கள்.

கேட்: வெ.பொ. என்றால் என்ன பொருள்?

கிளத்: வெண் பொற்காசுகள்.

கேட்: எங்கள் உள்ளத்தில் எழும் சிறிய ஐயப் பாடுகளையும் உங்களுக்கு எழுதிக் கேட்க நினைக் கிறோம். பதில் எழுதுவீர்களா?

கிளத்: எழுதுமுன் குயிலை ஊன்றிப் படி யுங்கள்.

கேட்: நின்று என்ற சொல்லின் முன் பேசி னான் என்ற சொல் வந்தால் ஒற்று மிகுமா?

கிளத்: மிகாது: நின்று பேசினால் என்று எழுத வேண்டும். நின்று, இருந்து, கண்டு, கொண்டு இவை அனைத்தும் மென்றொடர்க் குற்றியலுகரங் கள். இவற்றின் முன் வல்லெழுத்து வந்தால் மிகவே மிகாது.

இருந்து+தூங்கினான்=இருந்து தூங்கினான்.

கண்+பேசினான்=கண்டு பேசினான்.

மொண்டு + குடித்தான் — மொண்டு குடித் தான்.

கேட்: மேசைத் தமிழ்ச்சொல்லா?

கிளத்: மேசை என்பது இத்தாலி மொழி என்று சிலர் சொல்லுகிறார்கள். நமக்கு அது உடன்பாடில்லை. உதட்டின் மீது அமைந்திருப்பதனால் மீதை அல்லது மீசை என்று பெயர் உண்டாயிற்று. அதுபோலவே மீது என்ற சொல் மேது என்று ஆகும். மேது மேசை ஆதலுக்கும் வழி உண்டு. உயர்ந்திருக்கும் பெட்டிக்கு தமிழில் மேசை என்று பெயர் உண்டானதில் தவறு ஒன்றும் இல்லை. தமிழ் நாட்டில் வழங்கும் தமிழ்ப் பெயரை தமிழ் இலக்கண வகையில் ஆராய வேண்டியது முதல் வேலை.

மேசை என்பது பற்றி ஆராய இத்தாலிக்குப் போவது வீண் வேலை.

குயில் 1–5–62

* * * *

கேட்: வெற்றிலைக்கு முன் என்ன போட வேண்டும்?

வெண்பா

கிளத்தல் :

வெற்றிலைக்கு முன், என்ன போடுவார் வேலப்பா
சற்றிதனை எண்ணிவிடை சாற்றென்றான்
கொற்றன்
நகைத்துப்பாக் கென்று நவின்றான் வேலப்பன்
அகத்தியடா என்றான் அவன்
ஓட்ட வைத்த வால்.

உரைநடை

கேட்: ஆளுக்கு முளைத்திருக்கும் வால் இயற்கையானதா?

கிளத்: இல்லை. இடையில் ஒட்ட வைத்தது தான். அதை அறுத்துப்பார்; அறுபட்ட இடத்தில் புண்படாது. ஆளுக்கு நோக்காடும் இராது. முனிசாமி முதலியார் என்பதில் முதலியாரை நீக்கிப் பார்.

கேட்: வெந்நீரில் என்ன போட்டுக்குடிப்பாய்?

சிந்து கண்ணி!

கிளத்:

வெந்நீர் ஊற்றிச் செம்பில் வைத்நால்
என்ன போட்டுக் குடிப்பாய்?
வெந்நீர் ஊற்றிச் செம்பில் வைத்தால்
விரலைப் போட்டுக் குடிப்பேன்
வெந்நீர் ஊற்றிச் செம்பில் வைத்நால்
விரலைப் போடு வானேன்!
வெந்நீரிலே விரலைப் போடுவானேன்!
வெந்நீரிலே விரலைப் போட்டால்
வெப்பநிலை தெரியும்
வெந்நீரை நீ அப்படியே.
குடித்துவிட்டால் என்ன?
வெந்நீரிலே சூடிருந்தால்
வெந்து போகும் குடலே.

கேட்: எவன் நல்லவன்?

அறுசீர் விருத்தம்

கிளத்:

அனலன் தன்கிளியை நோக்கி
'ஆரடா திருட்டுப் பையா?''
எனச் சொல்லிக் கொடுத்துக் கொண்டே
இருந்தனன்! அங்கு வந்த
இரிசப்பன், ''இவ்வா றாய்உன்
இனிதான கிளிப யின்றால்
எவரையும் திருட்டுப் பையா
எனுமன்றோ'' என்றான்! ''நல்லவன்
எவன்?'' என்றான்! இரிசன் தானே?

குயில் 15–5

*   *   *   *

கேட்: அரசியலில் அனைத்துலகத் தமிழ்க் கவிஞர் பெருமன்றம் கலந்து கொள்ளாது என்று சொல்லிவிட்டு அது நடத்தும் குயிலில் கன்னடர் எதிர்ப்பை வெளியிடுவது சரியா? 62

கிளத்: அரசியலிலும் கட்சிக்கோட்டாலும் கலந்து கொள்வதில்லை என்பது தவிரத் தமிழ் பற்றிய செய்தியில் கலந்து கொள்வதில்லை என்று சொன்னதே இல்லை. இந்திக் கொள்ளிக் கட்டையைக் கொண்டு வந்து தமிழின் மூச்சுக் குழலில் திணிக்கிறான். சும்மா இருந்து விடுவதா? கன்னடன் தமிழை பழிக்கிறான். மூலையில் முக்காடு போட்டுக்கொண்டு நமக்கென்ன என்றா இருப்பது?

கேட்: சீனாவும் பாகிஸ்தானும் நாவலந்தீவை எளிதாய் நினைப்பதற்கு என்ன காரணம்?

கிளத்: உள்நாட்டுக் குழப்பந்தான் காரணம்.

கேட்: புளியங்கிளையாகிய அமெரிக்காவை விட்டு முருங்கக்கிளையாகிய உருசியாவை பற்றி விட்டார் நேரு. இது சரியா?

கிளத்: இப்போதுதான் நேருவுக்கு நல்லறிவு பிறந்தது.

கேட்: சீனாவை தடுத்து நிறுத்துவதில் மேனனுக்கு சுறுசுறுப்பு இல்லையே?

கிளத்: சுறுசுறுப்பு வரவேண்டிய நேரத்தில் வராதாம். நாவலந் தீவுக்கு வேண்டிய அளவு கையிருப்பு ஆயுதம் இல்லை போலும்!

கேட்: அனைத்துலகத் தமிழ்க் கவிஞர் பெருமன்றத்தின் மாநாடு எப்போது?

கிளத்: விரைவில்.

குயில் 1–7–62

* * * *

கேட்: சீனா வெடி கிளப்புமா?

கிளத்: வெடி இருந்தால்தானே!

கேட்: நம்மவர்க்கும் சீனாவை அடக்க ஏதாவது இருக்குமோ?

கிளத்: இல்லாமலா!

கேட்: இந்தி நலமா?

கிளத்: மூன்றாவது வகுப்புச் சிட்டில்கூட!

கேட்: இந்தியை இப்படியே விட்டுக்கொண்டு போனால்?

கிளத்: தமிழின் தலைக்கே ஆபத்து.

கேட்: ஏ.எல்.எஸ்; நாகிரெட்டி இருவரும் தில்லிக்குப் போகிறார்கள். வெற்றியோடு திரும்பு வார்களா?

கிளத்: திரும்பாமல் என்ன வானத்தேர் வந்து சேரும் என்பதில் உமக்கு ஐயப்பாடா?

கேட்: கச்சா பிலிம்ஸ் கிடைப்பதில் நிலைமை இப்படியே இருந்தால்?

கிளத்: திரைப்படங்களுக்குத் திருவாசகம் படிக்க வேண்டியதுதான்.

கேட்: ஏ.கே. வேலன் படத்தில் எல்லோரும் தமிழர்களாமே?

கிளத்: வாழ்க ஏ. கே. வேலனார்.

குரல் 15—7—62

* * * *

கேட்: உயிரைக் கொடுக்கவும் அஞ்சமாட்டோம் என்று சொன்ன தி.மு.க. வீரர்கள் சிறையில் நடுங்குகிறார்களாமே?

கிளத்: அவர்கள் பக்கா ஆசாமிகள் .உயிரை வீட்டில் வைத்துவிட்டு நடுக்கத்தை மட்டும் சிறைக்குள் கொண்டு வந்தார்கள்.

கேட்: தி.மு.க. போராட்டத்தால் பொருள்களின் விலை மட்டுப்பட்டு விட்டதா?

கிளத்: சோளம் மட்டுந்தான் நயமாகக் கிடைக்கிறதாம்.

கேட்: சிறையில் இருக்கும் தி.மு.க. வீரர்கள் அதிகாரிகளிடம் மன்னிப்புக் கேட்டதும் வெளியில் வந்ததும் ஆகிய இரண்டும் உண்மைதானா?

கிளத்: இரண்டும் மெய்தான்.

கேட்: கல்லெறிந்ததும் உந்து வண்டிகளை உடைத்ததும் ஆகிய தீச்செயலில் ஈடுபட்டவர்கள் தி.மு.க. ஆட்கள் அல்லவாம்! யாரோ சிலராமே!

கிளத்: 'தலைவர்கள்' இப்படிச் சொல்லுகிறார்கள். கல்லெறிந்தவர்களும் வண்டியைஉடைத்தவர்களும் தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள்தாமாம்! இல்லை என்று யாரோ சொல்லுகிறார்களாம்!

குயில் 1–8–62

(முற்றும்)